Registered as a Newspaper [illegible] 04 விலை ரூபா 5-00

நல்லூர் [illegible] நூலகம்
[illegible]ாட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 27 (09-02-94) புதன்கிழமை ஓசை 356

## வடக்கு-கிழக்கில் ஆசிரியர் நியமனம் இடை நிறுத்தம்

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் எந்தவொரு ஆசிரியர் நியமனத்தையும் தற்போதைக்கு வழங்கவேண்டாம் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. வட- கிழக்கு மாகாணத்தில் இதுவரை நியமனம் வழங்கப்படாமல் எஞ்சியுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கும் ஏனையோருக்கும் பயிலுநர் ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கு அண்மையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந் நிலையில் கல்வி அமைச்சினால் மாவட்ட கல்வித் திணைக்களங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்றுநிருபத்தில் மறு அறிவித்தல் வரை எந்தவொரு ஆசிரியர் நியமனத்தையும் வழங்க வேண்டாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை உடன் ஆரம்பிக்குமாறு வற்புறுத்து!

## இராணுவ முகாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தாண்டாமலை என்ற பகுதியில் இராணுவத்தினர் புதிய இராணுவ முகாம் ஒன்றை அமைத்துள்ளனர் புளுகநாவி எனுமிடத்தில் முன்னர் அமைக்கப்பட்டிருந்த முகாமையே படையினர் தற்போது தாண்டாமலை பகுதிக்கு மாற்றியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு படையினர் புதிய முகாம் ஒன்றை தாண்டாமலையில் திறந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## புலிகளின் அடுத்த தாக்குதல் மணலாற்றிலாம்

[கொழும்பு]

**இன்றைய நிலையில் இராணுவத்தினர் முகாமிலிருந்து வெளியில் வந்து தாக்குதல் நடத்த வேண்டும். அல்லது இராணுவம் பெரும்இழப்புக்களைச் சந்திக்கவேண்டி ஏற்படலாம் என 'ஐலண்ட்' வார இதழின் விசேட செய்தியாளர் அரசாங்கத்தை எச்சரித்துள்ளார். மேலும் விடுதலைப் புலிகளின் அடுத்த தாக்குதல் மணலாற்றுப் பகுதியில் இடம்பெறலாம் எனவும் தெரிவித்துள்ளார்.**

விடுதலைப்புலிகளின்அடுத்த தாக்குதல் இலக்கு மணலாறுப் பிரதேசமே எனவும் இப் பிரதேசத்திலுள்ள கொக்குத்தொடுவாய்முகாம் அல்லது கோவில்முனை முகாம் அல்லது வேறு எந்த முகாமாவது புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகலாம் என இவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய நிலையில் படையினர் தமது முகாம்களை விட்டு முன்னேறி வந்து தாக்குதலை மட்டுப்படுத்திய அளவிலாவது நடாத்தவேண்டும். இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அரசியல் தலைவர்கள் இராணுவ உயர் மட்டம் மீது அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் புதிய இராணுவத் தளபதி பொறுப்பிற்கு வந்து ஒருமாதம் முடிந்து விட்டது. மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ

(4ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் பாரிய ராணுவ நடவடிக்கை அரசின் திட்டத்தில் மாற்றமில்லை

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தல்கள் முடிவடைந்த கையோடு வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளும் அரசின் திட்டத்தில் எந்த மாற்றமும் இல்லை என கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

யுத்தத்திற்கு தேவையான ஆயுதங்களையும் உபகரணங்களையும் திரட்டும் நடவடிக்கையில் பாதுகாப்பு அமைச்சு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. வடக்கின் புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்ட ஏ. எம். யூ. செனிவரட்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கில் இராணுவ நடவடிக்கைகளை திட்டமிட்டு செயலாற்றும் சகல பொறுப்புகளும் அதிகாரங்களும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

## விமானத் தாக்குதலை நிறுத்தினாராம்;

இனப்பிரச்சினை தீர்வு குறித்த

## கனடாவின் நல்லெண்ணத்தை பரிசீலனை செய்கின்றேன் -தொண்டமான்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு கனடிய அரசின் நல்லெண்ணத்தை பயன்படுத்தி அரசியல் தீர்வு காண்பதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு அவ்வரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் பூர்வாங்க பேச்சுகளை நடத்த கனடா வருமாறு தமக்கு விடுக்கப்பட்ட அழைப்பைபரிசீலனை செய்து வருவதாகஅமைச்சர்தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்புக்களின் அழைப்பை ஏற்பதற்கு முன் நான் பலதரப்பட்ட மக்கள் கருத்தை அறிய வேண்டும் அது தொடர்பாக பரிசீலித்து வருகிறேன் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். கனடாவில் வாழும் தமிழ் பிரமுகர்களும் மதத்தலைவர்களும் அகதிகள் நலனில் அக்கறை கொண்ட கனடியர்களும், விடுதலைப்புலிகளுக்கும் அரசிற்கும் இடையில் சமரசத்தை ஏற்படுத்தும் பூர்வாங்க பேச்சை ஆரம்பிக்குமாறு அமைச்சர் தொண்டமானிடம் கோரியிருந்தனர்.

இது தொடர்பாக கனடாவில் உள்ள தமிழ் அகதிகள் நலனை கவனித்து வரும் பிரபல சட்ட நிபுணர் மார்க்ஸ் பேர்கர் அமைச்சர் தொண்டமானுக்கு அண்மையில் கடிதமொன்றை அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தபால் சேவைகளை சீராக்க அதிகாரிகள் முயலவேண்டும்

### அத்தியாவசிய சேவை மேலதிக ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

''வடபகுதிக்கான தபால் சேவையை ஓர் அத்தியாவசிய சேவையாக நாம் கருத சந்தித்த போது.

இன்றைய நிலையில் யாழ்ப்பாண மக்களுக்கு மிகவும் முக்கியமான சேவைகளில்

இலங்கை செஞ்சிலுவையிடம்

## 80 லட்சம் நஷ்டஈடு கோரி வைத்திய அதிகாரி வழக்கு

(கொழும்பு)

இறிலங்கா செஞ்சிலுவைச் சங்க சமுதாய வைத்திய அதிகாரி டாக்டர் கிங்ஸிலி ஹீன்தெனியா மேற்படி சங்கத் தலைவர் மற்றும் ஆளுநர் சபைக்கு எதிரான வழக்குதி ரெனப் பதவி நீக்கம் செய்யப்பட்டதை அடுத்து சிறிலங்கா செஞ்சிலுவைச் சங்கத்திடம் இருந்து அவர் 80 லட்சம்ரூபா நஷ்டஈடாகக் கோரவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதே வேளை, டாக்டர்

# விமானத் தாக்குதலை நிறுத்தினாராம்; தளபதிகள் மீது அதிகாரிகள் அதிருப்தி

## ஐலண்ட் பத்திரிகையும் கவலை

அடுத்த வாரம் ஓய்வு பெறவுள்ள விமானப் படைத் தளபதி கடந்த இருவாரங்களாக விமானத் தாக்குதல்களை நிறுத்தி வைத்திருப்பது குறித்து உயர் அதிகாரிகள் மட்டத்தில் அதிருப்தி நிலவுவதாக ஐலண்ட் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

இதற்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை எனக் குறிப்பிடும் அப்பத்திரிகை பதவிவிலகிச் செல்ல ஒரு சில வாரங்களே இருக்கும்போது இத்தகைய விமானத்தாக்குதல்களை நடத்தி தமிழ் மக்களின் வெறுப்பை சம்பாதிக்க அவர் விரும்பவில்லை என சில கருத்துகள் நிலவுவதாகவும் தெரிவிக்கின்றது.

தனிப்பட்ட ரீதியிலான முடிவைக் கைவிட்டு தேசிய பாதுகாப்பை கருத்திற் கொண்டு இன்றைய நிலையில் எதிரி பலமடைவதை தடுக்க வழி செய்யவேண்டும் என ஐலண்ட் பத்திரிகை தனது கருத்தை அதில் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# பத்தாண்டுகால ஆயுதக் கொள்வனவு ஊழல் பற்றி விசாரணைக்கு ஏற்பாடு

கடந்த பத்தாண்டு காலத்தில் ஆயுதப்படையினருக்கு கொள்வனவு செய்த ஆயுதங்கள் மூலம் இடம்பெற்ற ஊழல் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

1983இலிருந்து 1993வரை ஆயுதப்படையினருக்கு வெளிநாடுகளிலிருந்து ஆயுதம் கொள்வனவு செய்வதில் நிகழ்ந்த கமிஷன் வியாபாரம், ஊழல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள அரசும் பாதுகாப்பு அமைச்சும் ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பல கோடி ரூபா பணம் ஆயுதக் கொள்வனவின் போது கமிஷனாக பெறப்பட்டதாக பல ஆண்டு காலமாக குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டுவருகின்றன. தரம் குறைந்த ஆயுதங்களை இறக்குமதி செய்ததன்மூலம் மோசடி நிகழ்ந்துள்ளதாக பல சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள் குற்றஞ்சாட்டி வந்தனர். இவ் விவகாரம் விசாரணைக்கு வரும் பட்சத்தில் படையினரின் சிரேஷ்ட அதிகாரிகள் விசாரணைக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

# பேச்சுவார்த்தைக்காக ஆயுதங்களை புலிகள் கைவிட வேண்டியதில்லை

## ஜெரிடி சில்வா மேற்றிராணியாரிடம் கூறினாராம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த ஆயுதங்களை கைவிடவேண்டும் என்பது அவசியமில்லை என இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரிடி சில்வா தெரிவித்ததாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து அப்பத்திரிகை வெளியிட்ட தலைப்புச்செய்தியில் அண்மையில் யாழ். வந்து திரும்பிய கத்தோலிக்க திருச்சபை ஆயர் அதிவண. நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோவுடனான சந்திப்பின் போதே இராணுவத் தளபதி இத் தகவலை வெளியிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி கத்தோலிக்கக் குழுவை சந்தித்த ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண இணக்கம் தெரிவித்தார் எனவும் அப் பத்திரிகை கூறுகிறது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

(4ஆம் பக்கம் பார்க்க)

''வடபகுதிக்கான தபால் சேவையை ஓர் அத்தியாவசிய சேவையாக நாம் கருதவில்லை. வடபகுதிக்கான தபால் போக்குவரத்தை சீராக்குவதற்கு தபால் திணைக்களமே நடவடிக்கை எடுக்க வேண்டும்'' இவ்வாறு அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளரும் பாராளுமன்ற மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா தெரிவித்தார்.

அண்மையில் இவர் யாழ்ப்பாணம் வந்திருந்த போது எமது செய்தியாளரை ... பாண மக்களுக்கு மிகவும் முக்கியமான சேவைகளில் தபால் சேவையும் ஒன்று என்றும் இத்தபால் சேவை

(4ஆம் பக்கம் பார்க்க)

தலைவர் மற்றும் ஆளுநர் சபைக்கு எதிரான வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக எச்சரித்துள்ளார்.

உரிய காலத்துக்குமுன் திடீ

அதே வேளை, டாக்டர் கிங்ஸிலி ஹீன் தெனியா, பொலிஸ் குற்றப் புலனாய்

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. தே. க. அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றத்தில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவரப்போவதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சிப் பேச்சாளர் ரிச்சர்ட்பத்திரண தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினை தொடர்பாக இந்த அரசாங்கத்தின் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவின் நிலைப்பாட்டிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாட்டிற்கும் இடையே வேறுபாடுகள் நிலவுகின்றன. ஜனாதிபதி பயங்கரவாதப் பிரச்சினை என்று அறிவிக்கும் அதே வேளை ரணில் புலிகளுடன் பேசுவது குறித்து அறிவிக்கிறார். இது மக்களைக் குழப்பத்திற்கு உள்ளாக்கிறது.

விலைவாசி உயர்வை இந்த அரசாங்கம் கட்டுப்படுத்தத் தவறி விட்டது. மக்களின் பெருமளவு பணத்தை ஏயர்பஸ் கொள்வனவு மூலம் இழக்க வேண்டி ஏற்பட்டது. எம்பிலிப்பிட்டிய மனிதப் புதைகுழிகள் அரசாங்கத்தின் கடந்தகால செயற்பாடுகளை வெளியாக்கியுள்ளது. பெரு

(4ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கு மாகாணத்திற்கு 500 பெண் பொலிசார்

## தேர்தல் கடமையில் ஈடுபடுவார்களாம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் பணியாற்ற 500 பெண் பொலிசார் மேலதிகமாக அனுப்பப்படவுள்ளனர். வவுனியாவிலும் கிழக்கு மாகாணத்திலும் பணியாற்ற ஏற்கனவே 5000 பொலிசார் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

பெண் வாக்காளர்களை சோதிப்பதற்காகவே பெண் பொலிசார் அங்கு அனுப்பப் படுவதாக தெரிவிக்கப்படுகிறது. கிழக்கில் வாக்குச் சாவடிகளில் விசேட பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்துவதற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட 500 பொலிசாருக்கு விசேட பயிற்சி அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜெனிவா மாநாட்டில் கலந்துகொள்ளும்

# உறுப்பினர் பெயர்ப் பட்டியலை மாற்றியோர் மீது கடும் நடவடிக்கை

(கொழும்பு)

ஜெனிவாவில் விரைவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் மாநாட்டில் பங்குபற்றும் சிறிலங்காப் பிரதிநிதிகளின் பெயர்ப் பட்டியலில் மாற்றம் செய்ததற்காக வெளிவிவகார அமைச்சரவை மூத்த பணிப்பாளர் நாயகம் ஒருவர் மற்றும் இரண்டு அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிகேடியர் வீரசேகராவின் பெயரைப்பெயர்ப்பட்டியலில் இருந்து நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக நிகாரா றொட்றிக்கோவின் பெயரைச் சேர்த்துக்கொள்ளும்படி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பணித்திருந்தார். மாறாக பிரிகேடியர் வீரசேகராவின் பெயர் திரு. வீரசேகரா என்று வேறொரு பதவிப் பெயருடன் பட்டியலில் இடம்பெற்றுள்ளது இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து விசாரணை

(4ஆம் பக்கம் பார்க்க)

# கொத்தலாவல மீது இராணுவ விசாரணை

(கொழும்பு)

அமெரிக்காவில் இரு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புபட்ட சிறிலங்கா இராணுவ அதிகாரியான லெப். கேணல் கொத்தலாவல மீது இராணுவ நீதிமன்றம் விசாரணை நடத்தும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொத்தலாவலவின் நடவடிக்கை குறித்த குழுவிபரம் அறிக்கையை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரிடி சில்வா அமெரிக்க அதிகாரிகளிடம் கோரியுள்ளார்.

இதேவேளை தாம் விரை

(4ஆம் பக்கம் பார்க்க)

# இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

## கண்டெடுப்பு

திறப்புக் கோர்வை ஒன்று வேளாயுதம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப்பெற்றுக் கொள்ளவும்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து கீழே குறித்த பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 1994 03. 31 ஆம் திகதிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. தாவரவியல் பேராசிரியர் 2. புள்ளிவிபரவியலில் பேராசிரியர் 3. பௌதிக இரசாயனவியலில் பேராசிரியர் 4. இந்துநாகரிகப் பேராசிரியர்

சம்பள அளவுத்திட்டம்

பேராசிரியர் — ரூபா 16, 100 - 6 x 400 - 18, 500 |-

இத்துடன் நிலுவையிலுள்ள வேலைநிறைவேற்றப்படியாக 1994 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை சம்பளத்தின் 25:|. சதவீதத்திற்குச் சமமான தொகை செலுத்தப்படும்.

ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூபா 10,000|- படியும் அத்துடன் ஆண்டு அடிப்படைச்சம்பளத்தினதும், நிலுவையிலுள்ள பணியை நிறைவேற்றுவதற்கான ஆண்டுப்படியின் 10.|' மும் ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பதிலும் காலாண்டுத் தவணைப் புத்தகப் படியாகச் செலுத்தப்படும்.

1993 மே 12 ஆம் தேதிய 9|93 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப மாதாந்தப் படியாக ரூபா 600 |- செலுத்தப்படும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு அவர் சம்பள அளவுத்திட்டத்தில்

## இளங்கலைஞர் மன்ற 14-வது ஆண்டு இசைவிழா

இடம்: மன்ற கலாமண்டபம்
காலம்: 12.02.94 — 26.02.94
தினமும் பி. ப. 4-00 — இரவு 10-00 மணி.

மேற்படி விழாவில் நாதஸ்வர, தவில், வாய்ப்பாட்டு, வயலின், வீணை, வேணுகானம், மிருதங்க இசை, வில்லிசை, கதாப்பிரசங்கம், பரதநாட்டியம் போன்ற பல தரப்பட்ட இசை நிகழ்ச்சிகளும் இடம் பெறும், இளங்கலைஞர்களும் முன்னணிக் கலைஞர்களுமாக 500க்கு மேற்பட்ட கலைஞர்கள் பங்கு கொள்வர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்,

மேற்படி மன்றத்தினர்

(இ-8560).

## 25,000 தக்காளிக் கன்றுகள் முற்றிலும் இலவசம்

ஒவ்வொரு ஜாம் போத்தல் ஒப்படைக்கும் போதும் ஜாம் போத்தலுக்குரிய பணத்தைப் பெறுவதுடன் 5 தக்காளிக் கன்றுகளை முற்றிலும் இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள். இச் சலுகை கன்றுகள் உள்ளவரை மட்டுமே.

TASTE LINE INDUSTRIES (PVT) LTD.
14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(இ-8562)

## சபிண்டீகரண அழைப்பு



மலர்வு: 15 - 12 - 1918

உதிர்வு: 26 - 1 - 1994


சிற்றம்பலம் சின்னத்தம்பி

(இளைப்பாறிய அதிபர்-N. M. V காவெட்டி)

## நியதியை வெல்ல நாம் யார்?

''வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு''

- திருக்குறள்



### சிவத்திரு அ. நடராசா

''நின்ற நீரின் அளவினவாம் நீர்ப்பூக்களின் தாளினது நீளங்கள் அதுபோல மக்கள் தம் ஊக்கத்தளவினவாம் அவர் உயர்ச்சி''.

என்று மேற்கண்ட திருக்குறளுக்கு உரைசெய்திருக்கின்றார் பரிமேலழகர். கடின உழைப்பாலும் ஊக்கத்தாலும் முன்னேற்றங் கண்டவர், உரும்பராய் மேற்கு திரு. அருணாசலம் நடராசா அவர்கள். இளமை தொட்டு அவரது வாழ்வின் இறுதிவரை அவரை நன்கு அறிந்தவன் என்ற வகையில், இறை தொண்டிலேயே அவரது சேவை முற்றுப் பெற்றது எனலாம்.

பூபாலையா என்று செல்லமாக அழைக்கப்படும் அவரை நாடி நாட்டின் நாலாபக்கங்களிலிருந்தும் குருக்கள்மார், உற்சவகாரர்கள், விவாக சோபனம் நடத்துவோர், கிருகப்பிரவேசஞ் செய்வோர் வருகை தருவதை அயலவன் என்ற முறையில் அவதானித்திருக்கின்றேன். அவரை நாடி வருபவர்கள் மனநிறைவுடனேயே மீண்டு செல்வர்.

செய்யுந் தொழிலே தெய்வம் என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்தவர்; தெய்வ பக்தி உள்ளவர்; ஆலயச் சூழலில் அவரை எப்பொழுதுங் காணலாம்.

''ஆலயந் தொழுவது சாலவும் நன்று''

என்கின்ற அமிழ்த மொழியை நன்கு அனுபவித்தவர் நடராசா. அவர் ஆற்றிய தூய இறைதொண்டு அவருக்கு நல்வழிகாட்டியுள்ளது.

பிரிவு கவலை தருவதொன்று தான். நியதியை வெல்ல நாம் யார்?

திரு. நடராசா அவர்களின் ஆன்மா சாந்தியுறும் வண்ணம் குலதெய்வமான கருணாகரப்பிள்ளையாரின் திருவடிகளைப் பிரார்த்திப்போமாக!

(சிவத்திரு அ. நடராசா (பூபாலையா) அவர்களின் ஆன்மசாந்திக்கிரியைகள் இன்று முற்பகல் உரும்பராயில் நடைபெறவுள்ளன.)

கருணாகரப்பிள்ளையார் கோயில்
உரும்பராய்.


சிவாசார்யமணி,
சிவஸ்ரீ வை. சபாரத்தினக்குருக்கள்.

(இ-8565)

## 91-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 16 — 08 — 1937



இறப்பு: 09 — 02 — 1993

### திருமதி அந்தோனி மரியம்மா (ராசாத்தி)

(பெரியவிளான்)

தாய் — திருமதி சூசானம்; தந்தை — சூ. பர்நாந்து (அமரர்). கணவர் — ம. அந்தோனி. பிள்ளைகள் — பெலிக்ஸ் மோகன், பற்றிமா, யோ, அகினஸ் அருந்ததி, ப. மேரியோசேப்பின், பெனற் சவுந்தரநாயகம், மேபிள் மேரி. சகோதரர்கள் — புஸ்பராணி, இருதயம், மேரி மகேஸ், யசிந்தா, சிந்தாத்துரை (தவம்), அன்ரன். மருமக்கள் — ப. இராசநாயகம், செ. யோன், யோ. பதிமராசா, யேசுராசா (உதயன்), மேரி அனிற்றா, மரியகொறற்றி (லீலா). மச்சான்மார் — கபிரியற்பிள்ளை, செபஸ்ரியாம்பிள்ளை, இருதநாதர், பத்தநாதர். மச்சாள்மார் — மேரி திரேசா (கிளி), மாசில்லா (செல்லப்பாக்கியம்).

மானிப்பாய் அந்தோனியார் ஆலயத்தில் காலை 6 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

தகவல்: குடும்பத்தினர்

(7463)

## நினைவு கூருகின்றோம்..

## 1994-02-09

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்-பருத்தித்துறைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய-

**மகேஸ்வரன்** ( - - - )

1987ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலின் போது விழுப்புண் அடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு வருகையில் வீரச்சாவெய்திய-

**ரகு** (செல்லத்தம்பி யோகராசா -தாண்டியடி, திருக்கோயில் - அம்பாறை)

மன்னார் - இலுப்பைக்கடவைப் பகுதியிற் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய-

**தங்கேஸ்** (சந்தான் யோசப்பிள்ளை ஜெயக்குமார் நறுவிலிக்குளம், வங்காலை - மன்னார்)

**விஷ்ணு** (சந்தியாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை நெடுங்கண்டல் - மன்னார்)

1988ஆம் ஆண்டு தேசவிரோதக்குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய-

**வே. சந்திரன்** ( - - - )

அம்பாறை - தம்பிலுவில், முனையூர் பகுதியில்

பவத்தையும் கவனத்திற்கொண்டு அவர் சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20|- செலுத்திய பின்னர் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20|- பெறுமதியான காசுக் கட்டளை |தபாற் கட்டளையுடன் 23x10 ச.மீ அளவுடைய சுயமுக வரியிட்ட ரூபா 1|- முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்றபடிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

- பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994. 02. 01.
(கி-8561)

---

## சிற்றம்பலம் சின்னத்தம்பி

(இளைப்பாறிய ஆசிரியர்-N. M. M. V கரவெட்டி)

எமது குடும்பத்தலைவரான திரு. சி. சின்னத்தம்பியின் ஆத்மசாந்திக்கிரியை (10-2-1994) வியாழக்கிழமை நடைபெறும். அன்று நடக்கும் ஆத்மசாந்தி கிரியையிலும் மறுநாள் வெள்ளிக்கிழமை நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை கேட்டுக்கொள்கிறோம்.

62, ராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம். (7415)

தகவல்:
மனைவி, மகள்.

---

## 91-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
21.05.1971

தாயக மண்ணில்
11.11.1993

### வீரவேங்கை பொன்னையா
### (செல்லையா கணேசமூர்த்தி)

அளவெட்டி

பூநகரி முகாமதனை அழித்திடவே
புயலாக புறப்பட்ட வீரனே
சரித்திரத்தில் உன் பெயரை பதித்துவிட்டு
மறைந்து விட்டாயோ மறவனே.

எமது இல்லத்தில் நடைபெறும் (09.02.94) அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு போராளிகள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தற்போதைய முகவரி:-

தி. செல்லையா,
நீர்வேலிச் சந்தி,
நீர்வேலி.

- குடும்பத்தினர்.

(7447)

---

## 91-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

09-02-1994



### லெப்டினனட் ஜானு/மலர்விழி
### (துரைராஜா வனிதா)

பிறப்பு
18-11-1971

வீரச்சாவு
11-11-1993

மண்மீட்கவே சென்றாய் மேலான இலட்சியத்தில்
திண்மைமிகு பூநகரி எதிர்முகாம் பொடியாக்கும்
எண்ணமதிலே இணைந்தாய் எதிரிகளை வீழ்த்திவிட்டு
விண்முட்டு புகழ்சேர வீரச்சாவினை அடைந்தாய்
கண்ணீரைச் சிந்துகின்றோம் காலமென்றுமே
மறவோம்
பொன்னான இலட்சியமே முன்னேறி வெற்றிபெறும்.

இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

இன்று எமதில்லத்தில் நடைபெறும் 91-ம் நாள் நினைவு நிகழ்வில் சகபோராளிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

படித்த மகளிர் திட்டம்
மிருசுவில்,
(7464)

உன் நினைவால் எந்நாளும்
கலங்கி நிற்கும்
குடும்பத்தினர்

---

கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய-

❋ **வே. சந்திரன்** ( - - - )

அம்பாறை - தம்பிலுவில், முனையூர் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். நித்தி** (ஆறுமுகம் கணேசமூர்த்தி- ஆலையடிவீதி, தம்பிலுவில் 02 -அம்பாறை)

மட்டக்களப்பில் இந்தியப்படையினரால் கைதாகி ஒந்தாச்சிமடம் முகாமில் வைத்து அடித்துக் கொலை செய்யப்பட்ட

**2-ம் லெப். சிவம்** (அருளம்பலம் சிவஞானம்- களுதாவளை - மட்டு)

1989ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழக வளாகம் முன் இந்தியப்படையினர் எதிர்பாராதவிதமாக மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**கப்டன் சிவா-கடாபி** (வீரையா சிவகுமார்- அரியாலை கிழக்கு - யாழ்)

யாழ்-சாவகச்சேரி, கைதடிப்பகுதியில் தேசவிரோதக்குழுவினரால் வெட்டிக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**சி, தெய்வேந்திரபாலன்-மெண்டிஸ்** (கைதடி மேற்கு சாவகச்சேரி - யாழ்)

மன்னார் - வங்காலைப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1991ஆம் ஆண்டு குறிஞ்சாமுனைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்துமேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**கௌதீபன்** (செல்வராசா சாந்தன்-பெரியஊறணி மட்டு)

மணலாறு - நெடுங்கேணிப் பகுதியிற் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**அரி** (இரத்தினசபாபதி கிருபாகரன் - தண்ணீரூற்று முள்ளியவளை - முல்லை)

முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**பிரதாப்** (காசி பரமசிவன் - இல 10, ஸ்கந்தபுரம் கிளி)

1992ஆம் ஆண்டு மட்டு - பன்சேனை, நல்லதண்ணீரோடை ஆகிய கிராமங்களைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தாழங்குடா, பண்டாரியாவெளி பகுதிகளைச் சேர்ந்த இருவர் உட்பட 04 தமிழர்கள்.

**ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.**

❋ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்-

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(கி-8566)

மாநகராட்சி மன்றம்

சிந்தனைக்கு

இறைவன் நோக்குவது நிரம்பிய கைகளையல்ல;
தூய்மையான கைகளையே

- பும்புலியஸ் ஸைரஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 09-02-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

# இரண்டாம் தர விடயம்

சிறிலங்கா அரசாங்க வட்டாரங்களில் இருந்து கடந்த சில நாட்களாக வெளிவரும் தகவல்கள் இனப்பிரச்சினையில், அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்ற குழப்பத்தை மக்களுக்கு ஏற்படுத்துபவையாக உள்ளன. அதாவது, ஒருபுறம் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பொதுக் கூட்டங்களில் இனவாதத்தின் உச்சத்தில் இருந்து பேசுகின்றார். ஆனால், மறுவளமாக அரச வட்டாரத் தகவல்கள் என பத்திரிகைகளில் வெளிவரும் தகவல்கள் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வைக் காண முயற்சிப்பதுபோல் சித்திரிக்கப்படுகின்றன.

இதன் ஓர் அம்சமாகவே, விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டால் மட்டுமே அவர்களுடன் பேச்சுவார்த்தை என்ற நிபந்தனையைக் கைவிடுவது பற்றி அரசாங்கம் பரிசீலித்து வருவதாகவும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் முட்டுக்கட்டையாக இருக்காது என வெளிவந்துள்ள தகவல்களும் ஆகும்.

இத்தகவல்கள் பத்திரிகைகளின்கண்டுபிடிப்பா? அன்றி அரசாங்கத்தின் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றமா என்பதைத் தற்பொழுது கண்டறிவது கடினமானதாக இருப்பினும், அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானிப்பின் சமாதானத் தீர்வில் விருப்பம் கொண்டுள்ளதுபோல் காட்டுவதற்கு சில முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவே ஊகிக்கக் கூடியதாக உள்ளது.

மேற்கூறப்பட்ட இரண்டு தகவல்களில் ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என்ற நிபந்தனையை அரசாங்கம் தளர்த்துவது குறித்து பரிசீலிப்பதில் என்ன பயன் உள்ளது? பேச்சுவார்த்தைக்கு ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என்ற நிபந்தனையைக் கொண்டு வந்தது அரசாங்கமே. ஆகையினால், நிபந்தனையைப் போட்டு பின்னர் கைவிடுவதென்பது, அரசாங்கம்தானே போட்ட தடையைத் தானே விலக்கிக் கொள்வதாக அமையக் கூடியதே ஒழிய பேச்சுவார்த்தையை நடத்தவோ அன்றிச் சமாதானச் சூழ்நிலையை உருவாக்கவோ எந்த வகையில் அது பயன்படப் போகின்றது?

இதேபோன்றே, நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் முட்டுக்கட்டை ஏதும் போடாது என்பதிலும் முன்னேற்றகரமான அம்சம் எதுவும் இருப்ப...

# தேர்தல் மூலம் ஜனாதிபதியாக விஜேதுங்க அஞ்சுகின்றார்

## - திருமதி சிறிமாவோ

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலுக்கு முகம் கொடுக்க அஞ்சியே டி.பி. விஜேதுங்க பாராளுமன்றம் மூலம் வரப் பார்க்கிறார். பாராளுமன்றத் தெரிவின்மூலம் ஜனாதிபதியாகுவது அரசியலமைப்புக்கு முரணானது. ஜனாதிபதி தேர்தலில் அச்சமின்றி என்னுடன் போட்டியிட வருமாறு விஜேதுங்கவிற்கு சவால் விடுகிறேன். இவ்வாறு திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா கூறியுள்ளார்.

மாத்தறை உயன்வத்தை விளையாட்டுத்திடல் உள்ளரங்கில் நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில்,

நான் உயிருடன் இருக்கும் வரை சுதந்திரக்கட்சியை எவராலும் ஒழித்துவிட முடியாது. கடந்த 35 வருடகாலமாக நான் சிறிலங்கா சுதந்திரக்கட்சியை பாதுகாத்து வந்துள்ளேன். எதிர்காலத்திலும் அக்கட்சியைப் பாதுகாப்பேன். 1960,70ஆம் ஆண்டுகளில் கட்சித் தலைவியாக இருந்தபோது நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் 2|3 பங்கு வாக்குகளைப் பெற்று அரசை அமைக்க முடிந்தது என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ளவிரும்புகிறேன்

ஜே. ஆர்- மற்றும் பிரேமதாசாவின் கொள்கையையே விஜேதுங்கவும் கடைப் பிடித்து வருகின்றார்.

நாம் சிறுபான்மையினரை அரவணைத்துக் கொள்ள வேண்டும். எமக்கு சிறுபான்மையினரின் வாக்குகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். தோட்டத்தொழிலாளரின் வாக்குகள் எமக்கு இன்றியமையாதனவாகும். அவை கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பேசிய மேல்மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க தமது உரையில் தென் மாகாணசபைத் தேர்தல்தான் மக்கள் சுதந்திரமாக வாழ முடியுமா என்பதை தீர்மானிக்கவுள்ளது; எனத் தெரிவித்தார்.

# மாஸ்கோ தூதுவரகங்களில் விசா பெறுவது கடினம்

(கொழும்பு)

மாஸ்கோ நகரில் இருக்கும் எந்தவொரு நாட்டின் தூதுவராலயத்திலும் இலங்கையர்கள் அந்த நாட்டிற்கான நுழைவு அனுமதியை (விசாவை) பெறுவது என்பது இப்போது முயற்கொம்பாகிவிட்டது. இவ்வாறு மாஸ்கோவிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் நிர்வாக உத்தியோகத்தரான கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

மாஸ்கோவில் தத்தளிக்கும் இலங்கையர்கள் பற்றி அவர் எழுதியுள்ள கட்டுரையொன்றில் மேலும் குறிப்பிடுகையில், மேற்கு நாடுகளுக்கு செல்வதற்காக ஏஜென்சிக்காரர்களால் மாஸ்கோவிற்கு அழைத்து வரப்பட்டவர்களின் அவலங்கள் பற்றி விபரித்திருப்பதோடு பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும் என்ற உணர்வுடன் சொந்த நாட்டிற்கு திரும்பும் முடிவை காலம் தாழ்த்தியேனும் மேற்கொண்டவர்கள் விவேகிகள் எனத் தெரிவித்துள்ளார்.

# பிரேமச்சந்திர - தலைவர் தெரிவு செல்லுபடியாகாது

## நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கியதேசியமுன்னணியின்பிரேமச்சந்திரதலைமையில் கூட்டப்பட்ட செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அக்கட்சி செயல்படுத்தக் கூடாது என நீதிமன்றம் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற மேற்படி வழக்கில் செயற்குழுவினால் தலைவராக ஜீ. எம். பிரேமச்சந்திரவும், ஏனைய பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட டி. பி. இலங்கந்த, டி.பி. தலுகல்ல போன்றவர்களின் பதவியும் சட்டவிரோதமானது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதே வேளை தற்போது கட்சியின் தலைவராக இருக்கும் ஏ. சீ. குணரட்னாவின் தலைவர் பதவியையும், அவரின் கட்சி அங்கத்துவத்தை யும் தடை செய்ய எடுத்த தீர்மானம் சட்டவிரோதமானது என்றும் கட்சி விதிமுறைக்கு அமைய செயல்படுத்தப்படக்கூடாது எனவும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

# தென்மாகாண தேர்தலுக்கு 8000 பொலிசார் கடமையில்

## - பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

தென் மாகாண சபைத் தேர்தல் காலத்தில் அமைதியைப் பேணுவதற்காக அப்பகுதியில் எட்டாயிரம் பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட இருப்பதாக தென் மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் குமார...

...சாரக் கூட்டங்களும், சிங்கள மகா சம்மத பூமி புத்தா, மற்றும் சுயேட்சைக் குழுக்களின் கலந்துரையாடல்களும் பெருமளவில் இடம்பெற்று வருவது தெரிந்ததே. இதே வேளை தென் மாகாணத்தில் தேர்தல் சட்டங்களை மீறி...

# ஆய்வரங்கம்

தமிழிலக்கிய மரபில் அழகியல் என்னும் பொருள் பற்றிய ஆய்வரங்கம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் பொருளியல்துறைக் கருத்தரங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தமிழ்த்துறைத் தலைவர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இவ் ஆய்வரங்கில் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் ஆய்வுரை வழங்கவுள்ளார்.

# குருவிச்சைகளை வெட்டி அகற்றுங்கள்

# கால்நடைசுகாதாரநிலையம் குமுழமுனையில் ஆரம்பம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் குமுழமுனைப் பகுதியில் கால்நடைகளுக்கான சுகாதார நிலையம் ஒன்றை அமைத்துள்ளனர்.

இந்த நிலையத்தினால் கால்நடைகளுக்கான தடுப்பூசி போடல், அவசர சிறு சிகிச்சைகள் வழங்குதல், கால்நடைகளுக்கான மருந்து விநியோகம் போன்ற சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடைகள் அதிகமாக இருக்கின்றபோதும் கால்நடைத் திணைக்களத்தின் செயற்பாடுகள் போதுமான அளவுக்கு இல்லை என்பதும், கால்நடைகளுக்கான இச் சுகாதார நிலையம் செயற்படத் தொடங்கியிருப்பதை யடுத்து இப் பகுதியில் கால்நடை இறப்புவீதம் வெகுவாகக் குறைந்து இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# மூதறிஞர் மறைவு குறித்து சமய பேரவை அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

அரும் தமிழ் ஆசானாகவும் பாடநூல் ஆசிரியராகவும் பல்லாண்டு காலம் அரும்பணியாற்றி அமரத்துவம் அடைந்த மூதறிஞர் க.சி. குலரத்தினம் அவர்களது இழப்பு ஈடுசெய்ய முடியாததாகும். அன்னாரது மறைவு அதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு பல்கலைப்புலவர், சைவப்புலவர், மூதறிஞர் க. சி. குலரத்தினம் அவர்களது மறைவு குறித்து இந்து சமயப் பேரவை வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில குறிப்பிடப்பட்டுள்ளது.

நல்லூர் ஞானப்பிரகாச முனிவரின் வரலாற்றைக் கூறும் நூலைஎழுதி அதுநூலுருப் பெறும் இத்தருணத்தில் அவர் எம்மை விட்டுப்பிரிந்தமைபெரும்கவலையைத்தருவதாகும் எனவும் அவ் இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிலஅளவையாளர்களுக்கு கலந்துரையாடல் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ நீதிமன்றங்களில் பணிபுரிய விரும்பும் சகல நிலஅளவையாளர்களுக்குமான கலந்துரையாடலொன்று எதிர்வரும் சனியன்று காலை பத்து மணியளவில் கோண்டாவிலில் இருக்கும் அரசியற்துறைப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில தமிழீழ நீதிமன்றத்தின் நிலஅளவை வேலைகளில் ஈடுபட விரும்புவோரும், இதுவரை தமது பெயர்களை பதிவுசெய்து கொள்ளாத நில அளவையாளர்களும், தமது பெயர்களை அன்றைய தினத்தில் பதிவு செய்யலாம் எனவும் நிலஅளவைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தகுதி இருந்தும் அனுமதி இல்லாமல் இருக்கும் நில அளவையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் செயலாற்றலாம் எனவும், நிலஅளவைக் கருவிகளை வைத்திருப்போர் அவற்றை இத்தினத்தில் பதிந்து கொள்ளலாம் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின்போது அரசியல் மற்றும் நிதித்துறைப் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவிருப்பது குறிப்பிடத் தக்கது.

# விசா பெறுவதில் மோசடி அமெ. தூதுவரகம் எச்சரிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவுக்கு செல்வதற்காக நுழைவு அனுமதியை (விசா) பெறுவதற்காக விண்ணப்பிப்போர் தவறான அல்லது பொய்யான தகவல்களைக் கொடுத்தால் அவர்கள் நுழைவு அனுமதி பெறும்...

...க்க விசா பெறுவதற்கு நிரந்தரமாகவே தகுதியற்றவர் ஆக்கலாம்.

பெயர், பிறந்த திகதியும் இடமும், தொழில் வரலாறு, அல்லது நிலைமை, வருமானம், மணமானவரா இல்லையா என்ற விபரம்...

...சமாதானச் சூழ்நிலையை உருவாக்கவோ எந்த வகையில் அது பயன்படப் போகின்றது?

இதேபோன்றே, நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் முட்டுக்கட்டை ஏதும் போடாது என்பதிலும் முன்னேற்றகரமான அம்சம் எதுவும் இருப்பதாக இல்லை. பேச்சுவார்த்தை என்பதற்கு நிபந்தனை என்பது எப்பொழுதுமே சாத்தியமாகாத அம்சமாகும். அத்தோடு, பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் முட்டுக்கட்டை போடாது என்றால், யாருடன் யார் நடத்தும் பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் முட்டுக்கட்டை போடாது என்பதும் ஒரு கேள்வியாகும்.

அதாவது, அரசாங்கம் நிபந்தனைகளைப் போடுவதும் தளர்த்துவதும் பேச்சுவார்த்தைகளை நடத்தவோ அன்றி சமாதானத்தையோ உருவாக்கப் பயன்படப் போவதில்லை. அது தனக்குத் தானே போட்ட தடைகளை அகற்றவே உதவக் கூடும். இதேவேளை பேச்சுவார்த்தை நடத்தவும், சமாதானம் உருவாகவும் தேவையானது சுமுகமான ஓர் அரசியல், இராணுவச் சூழலே ஆகும். சுமுகமான அரசியல் சூழலை உருவாக்குதல் என்பது நிபந்தனையல்ல; அது சமாதானம் உருவாவதற்கானதொரு அடிப்படைத் தேவையாகும்.

இந்நிலையில், சமாதானம், பேச்சுவார்த்தை என்பனவற்றில் அரசாங்கம் அக்கறை காட்டுவதாக இருப்பின் இவ்விடயங்களிலேயே கவனம் செலுத்த வேண்டும். ஆனால், அரசாங்கத்தின் நிலைப்பாடானது, சமாதானத்தின்பால் கொண்டுள்ள விருப்பத்தினால் ஏற்பட்டது என்பதை விட வேறு சில கோரிக்கைகளைக் கொண்டது.

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் பேரினவாதப் போக்கு சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்து சில நெருக்கடிகளைத் தோற்றுவித்திருப்பதாக ஊகிக்க முடிகின்றது. கடந்த ஆண்டில், உதவி வழங்கும் நாடுகள் போரை முடிவிற்குக் கொண்டு வர வேண்டும் என்ற ரீதியில் சில அறிவுறுத்தல்களை சிறிலங்கா அரசிற்கு விடுத்திருந்தன. ஆனால், அரசாங்கம் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. மாறாக, போரை மேலும் ஊக்குவிக்கவே முயற்சித்தது. இந்நிலையில் மீண்டும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் இவ்வாண்டு இன்னும் சில மாதங்களில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், மீண்டும் உதவியைப்பெற்றுக்கொள்ளவும், யுத்தத்திலேயே அரசு அக்கறை காட்டுவதாகஎழுந்து வரும் குற்றச்சாட்டுக்களை நீக்கவுமே அரசு சமாதான முயற்சிகளை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகக் காட்ட முற்படுகின்றது, அதிலும், வெளிப்படையாகத் தமது நிலைப்பாட்டைக் காட்டிக் கொள்வதால் தேர்தல் ஆண்டில் கட்சிக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சத்தினால் மூன்றாம் தரப்பின் ஊடாகவே காட்டிக் கொள்ள முற்படுகின்றது. இந்நிலையில், சமாதானம் குறித்து வெளிவரும் தகவல்கள் இரண்டாம் தரத் தகவல் என்ற ரீதியிலேயே பார்க்கப்பட வேண்டியவையாகும் எழுந்துள்ளது.

---

...முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் ஆய்வுரை வழங்கவுள்ளார்.

## குருவிச்சைகளை வெட்டி அகற்றுங்கள்

குருவிச்சை, மரங்களின் எதிரி; அவற்றை அழிக்க வேண்டும் என்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; குருவிச்சை மரங்களில் வளரும் ஒரு ஒட்டுண்ணி. அவை நாம் வளர்க்கும் பயனுள்ள மரங்களில் ஒட்டிக்கொண்டு உணவையும், நீரையும் உறிஞ்சி வளர்கின்றது. இதனால் வளர்ப்பு மரங்கள் நலிவடைவதுடன் பயன் அற்றதாகி வீணே நலிந்து போகின்றன. இதனைத் தடுப்பதற்காக குருவிச்சை மரங்களை உடனே வெட்டி அகற்றுவதே சிறந்த வழியாகும்.

---

...தேர்தல் காலத்தில் அமைதியைப் பேணுவதற்காக அப்பகுதியில் எட்டாயிரம் பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட இருப்பதாக தென்மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் குமார சிறிகமகே கூறியுள்ளார்.

தென்மாகாண சபைக்கான தேர்தலை முன்னிட்டு ஐ.தே.க, பொதுஜன ஐக்கிய முன்னணி, நவ சமசமாஜக் கட்சி ஆகியனவற்றின் பிர...றும் சுயேட்சைக் குழுக்களின் கலந்துரையாடல்களும் பெருமளவில் இடம்பெற்று வருவது தெரிந்ததே. இதேவேளை தென்மாகாணத்தில் தேர்தல் சட்டங்களை மீறி சமாதானத்திற்கு பங்கம் விளைவிப்போரை உடனடியாக கைதுசெய்யுமாறும் தென்மாகாணத்திலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## செட்டிகுளம் பி.செயலருக்கு திடீர் இடமாற்றம்

(வவுனியா)

வவுனியா பிரதேசத்தில் அரச உயரதிகாரிகள் சிலருக்கு திடீர் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. செட்டிகுளம் பகுதியின் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய திருமதி தேவி திருநாவுக்கரசு வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளராக இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார் செட்டிகுளம் பகுதியில் மீள் குடியேற்றம், மற்றும் நிவாரணம் உட்பட பல்வேறு பணிகளில் இவர் முன்னின்றுஉழைத்தவர் எனக் கூறப்படுகின்றது.

---

அமெரிக்காவுக்கு செல்வதற்காக நுழைவு அனுமதியை (விசா) பெறுவதற்காக விண்ணப்பிப்போர் தவறான அல்லது பொய்யான தகவல்களைக் கொடுத்தால் அவர்கள் நுழைவு அனுமதி பெறும் தகுதியை நிரந்தரமாகவே இழக்க நேரிடலாம் என்று கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அத்தூதுவரகம்விடுத்திருக்கும் அறிக்கை ஒன்றில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது; விசா பெறுவதற்காக விண்ணப்பிப்போர் கள்ளத்தனமான ஆவணங்களை சமர்ப்பிப்பது குறித்து அமெரிக்கத் தூதுவரகம் கவலை கொண்டுள்ளது.

விசா பெறுவதற்கான மனுவில் பொய்த் தகவல்களை கொடுப்பது அல்லது அதனுடன் கள்ளத்தனமான ஆவணங்களை சமர்ப்பிப்பது அமெரிக்க குடியேற்றச் சட்டத்தின் கீழ் ஒரு விண்ணப்பதாரியை அமெரி...தரமாகவே தகுதியற்றவர் ஆக்கலாம்.

பெயர், பிறந்த திகதியும் இடமும், தொழில் வரலாறு, அல்லது நிலைமை, வருமானம், மணமானவரா இல்லையா என்ற விபரம், அமெரிக்காவிலுள்ள நெருங்கிய உறவினரின் பெயர், அமெரிக்கா செல்வதற்கான காரணம் என்பவை தொடர்பாக தவறான அல்லது பொய்யான தகவல்களைக் கொடுத்தல் என்பன குற்றமாகக் கருதப்படும்.

முறையற்ற வழிகளில் கடவுச்சீட்டுகளை அல்லது உள்நுழைவு அனுமதி (விசா) களை பெற முயல வேண்டாம் எனவும், விசா மோசடியில் ஈடுபடுவோர் மற்றும் அமெரிக்காவினுள் சட்டவிரோதமாக புகுவதற்கு உதவுவோருக்கும் அமெரிக்கா செல்வது நிரந்தரமாக தடுக்கப்படும் எனவும் அமெரிக்க தூதுவரகம் மேலும் எச்சரித்துள்ளது.

---

# வெளிநாட்டார் வெளியேறுமாறு எகிப்து தீவிரவாதிகள் எச்சரிக்கை

(செய்ரோ)

எகிப்து நாட்டைவிட்டு வெளியேறுமாறு முஸ்லிம் தீவிரவாதிகள் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கும், முதலீட்டாளர்களுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

முஸ்லிம் தீவிரவாத இயக்கமான கமா எப் இஸ்லாமியா இயக்கம் பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் எங்கள் நம்பிக்கைகளையும், புனிதமானது என மதிக்கப்படும் லட்சியத்தையும் பாதுகாக்க நாங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறோம். முபாரக்கின் சர்வாதிகார ஆட்சி சட்டத்தையும் மனித உரிமைகளையும் மீறி வருவதே இதற்குக் காரணம் ஆகும்.

கண்டிப்பான இஸ்லாமிய நாடு ஒன்றை ஏற்படுத்த 1992ஆம் ஆண்டு முதல் முஸ்லிம் தீவிரவாதிகள் போராடி வருகின்றனர் என்பதும், இவர்களின் தாக்குதல்களால் இதுவரையில் 290 பேர் கொல்லப்பட்டிருப்பதுடன், 670க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என்பதும், இத்தாக்குதல்களால் வருடாந்தம் 300 கோடி டாலருக்கும் அதிக வருவாயை ஈட்டும் எகிப்திய உல்லாசப் பயணத்துறை பெரும் வீழ்ச்சியைச்சந்தித்துள்ளது என்பதும் தெரிந்ததே.

இந்த இயக்கத்தைச் சேர்ந்த ஏழு பேர் அண்மையில் பொலிசாரால் கொல்லப்பட்டிருப்பதைத் தொடர்ந்தே இவர்கள் வெளிநாட்டார் தமது சொந்தப் பாதுகாப்பை முன்னிட்டு வெளியேறட்டும் எனத் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## தாழமுக்கம்

இலங்கைக்குத் தென்மேற்கு திசையில் வங்கக் கடலில் உருவான தாழமுக்கம்தீவிரமடைந்து நேற்றுமுன்தினம்மாலை வடதமிழ்நாட்டின் கரைக்கப்பால் மையம் கொண்டிருந்ததாக சென்னை வானிலை அவதான நிலையம் அறிவித்தது.

இதனால் தமிழக கடலோரத்தில் மழை பெய்யலாம் எனவும், மணிக்கு 55 கிலோமீற்றர் வேகத்தில் கடும் காற்று வீசலாம் எனவும் சென்னை வானிலைஅவதான நிலையம் தெரிவித்துள்ளது.

---

# உயிர்களை மட்டும் கொல்லும் புதிய ஆயுதம் எம்மிடம் உள்ளது

### ஸிரினோவ்ஸ்கி எச்சரிக்கை

(பெல்கிறேட்)

மனிதர்களால் சகிக்க முடியாத அளவு சத்தத்துடன் எவ்வித அடையாளம் இன்றியும், காயம் ஏற்படாமல், ஒரு சொட்டு இரத்தமும் சிந்தாமல், கட்டடங்களை சேதப்படுத்தாமல் பிணங்களை மட்டும் விட்டுச் செல்லும் "எலிப்டன்" என்ற ஆயுதம் தம் வசம் இருப்பதாக ரஷ்யாவின் எதிர்க்கட்சித் தலைவரும், தீவிர வலதுசாரித் தலைவருமான ஸிரினோவ்ஸ்கி கூறியுள்ளார்.

தாம் குறிப்பிடும் பயங்கர இரகசிய ஆயுதம் வெறும் விளையாட்டு அல்ல என்றும் பொஸ்னியாவில் அது ஏற்கனவே பன்னிரண்டு முஸ்லிம்களைக் கொன்றிருக்கின்றது என்றும் அவர் கூறுகின்றார்.

யூகோசெலவாக்கியாவில் சுற்றுப் பயணம் செய்தபோது இந்த இரகசிய ஆயுதத்தை செயல்படுத்திக் காட்டப் போவதாக பலதடவை கூறினாரெனினும் இதற்கான ஆதாரம் எதையும் காண முடியவில்லையென அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை ஸிரினோவ்ஸ்கியை சாந்தப்படுத்த அவருக்கு மனநோய் எதிர்ப்பு மாத்திரை கொடுக்கப்பட வேண்டும் எனவும் ரஷ்ய ஆயுதங்களைப் பரிசோதிக்கும் அதிகாரம் அவருக்கு கிடையாது எனவும் ரஷ்ய வெளிநாட்டு அமைச்சர் கொஸிரேவ் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நல்லூர் இளை நூலகம்
யாழ்ப்பாணம்


## வலிகாமம் மேற்கு உதைபந்தாட்ட சங்கம்
## நிர்வாகசபைகூட்டமும் பொதுக் கூட்டமும்

எதிர்வரும் 12-02-94, 27-02-94ஆம் திகதிகளில் காலை 9-00 மணிக்கு முறையே நிர்வாகசபை, பொதுச்சபை கூட்டம் யாழ்| சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெறும்.

1; 05-02-94 இல் நடைபெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளத் தவறிய கழகங்கள் தயவு செய்து உடனடியாக சங்க செயலாளருடன் தொடர்பு கொண்டு 'பீ', ''சி'' படிவங்களைப் பெற்று 1994க்கான சந்தாப்பணத்துடன் 11-02-94க்கு முன்னதாக சமர்ப்பிக்கவும்.

2; சங்க அனுமதி பெற்று சுற்றுப் போட்டிகளை நடத்திக் கொண்டிருக்கும் கழகங்களும் சங்கமும் 31-01-94 வரையிலான அறிக்கையை விபரமாக செயலாளருக்கு (யாழ். மாவட்ட மத்தியஸ்தர்) தயவு செய்து 11-02-94க்கு முன்னதாக அனுப்பி வைக்கவும். (கழகங்களிடம் இருந்து தண்டனைப் பணங்களை அறவிட வேண்டியுள்ளது)

3; பிரேரணைகள் யாவும் 20ஆம் திகதிக்கு முன்னதாக நேரடியாகவோ | தபால் மூலமோ ஒப்படைக்க வேண்டும்.

4. சங்க யாப்பு விதிகளுக்கமைய மற்றைய ஆவணங்களையும் அனுப்பி ஒத்துழைக்கவும்.

நன்றி

சேது விபுலானந்தா
தலைவர்

வை. யோகேந்திரன்
கௌரவ செயலாளர்

(சி-8568)


# சேவா வனிதா அமைப்பின் வாகனம் தேடிக்கண்டுபிடிக்க கோரிக்கை

(கொழும்பு)

சேவா வனிதா அமைப்பினால் கடந்த வருடம் முதற்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட டாம்பீகமான மினி பஸ்களைத் தேடிக் கண்டுபிடிக்கக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவி நாடப்பட்டுள்ளது.

இந்த அரச சார்பற்ற அமைப்பின் பாவனையிலிருந்த மினி பஸ்களைக் காணவில்லை என்று அமைப்புக்குப் பொறுப்பானவர்கள் தமக்கு அறிவித்திருப்பதாக கணக்குப் பரிசோதகர்கள் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். சேவா வனிதா அமைப்பு, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவி ஹேமாவினால் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சேவா வனிதா என்ற வாசகம் பொறிக்கப்பட்ட காணாமற் போனது என்றுசொல்லப்படும் வாகனங்கள் கம்பாந்தோட்டையில் பயணிகள் சேவையில் ஈடுபட்டுள்ளதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சேவா வனிதா அமைப்பு என்ற வாசகங்கள் அழிக்கப்பட்டு வேறு வாகன இலக்கத் தகடுகளோடு இந்த வாகனங்கள் ஓடுவதாகவும் தெரிய வருகிறது.

மினிபஸ்கள் முன்னர் சேவா வனிதா அமைப்பு உறுப்பினர்களின் தேவைக்கும், கார்கள் உத்தியோகபூர்வகடமைகளுக்கும் பாவிக்கப்பட்டன. சம்பந்தப்பட்ட வாகனங்கள் வெளிநாட்டு நலன் விரும்பிகளால் நன்கொடையாக வழங்கப்பட்டவை. புதிதாக நியமிக்கப்பட்ட சேவா வனிதா அமைப்பு நிர்வாகிகள் காணாமற் போனதாகச் சொல்லப்படும் இந்த வாகனங்களைக் கண்டுபிடிக்க குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவியைக் கேட்டுள்ளனர்.

## வாகனக் கொள்வனவிற்கு அரச ஊழியருக்குக் கடன்

அரச ஊழியர்கள் உத்தியோகபூர்வ பாவனைக்கென மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்கு விரைவில் அரசு கடன் வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசதுறையில் சகல நிரந்தர மற்றும் சமயாசமய ஊழியர்கள் இக் கடனைப் பெறுவதற்கு உரித்துடையவர்கள். ஓர் ஊழியர் ஆகக் கூடுதல் பணமாக 22,500ரூபாவைக் கடனாகப் பெறமுடியும். இதற்குமுன் தனது வசிப்பிடத்திற்கும் அலுவலகத்திற்கும் இடையில் பிரயாணம் செய்வதற்காக வழங்கப்பட்ட பிரயாணப்படி இப் புதிய கடன் திட்டத்தினால் ரத்து செய்யப்படுகிறது என பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது

### பேச்சுவார்த்தை

ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவும் அரசியல் தீர்வுத் திட்டம் பலனளிக்கலாம் என சிரேஷ்ட அரச அதிகாரிகளிடம் கூறியதாகவும் சண்டே ரைம்ஸ் பத்திரிகை தெரிவிக்கின்றது. இது ஒரு முக்கிய மானதோர் கொள்கை மாற்றம் என அப் பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இந்திய கிரிக்கெட் வீரர் கபில்தேவ் உலக சாதனை

## 432 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்

(டில்லி)

கிரிக்கட் டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய பெருமையை இந்திய கிரிக்கட் வீரர் கபில்தேவ் பெற்றுள்ளார். நேற்றுக் காலை அகமாபாத்தில் ஆரம்பித்த இந்திய- சிறிலங்கா அணிகளிடையிலான மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ரின் முதல்நாள் ஆட்டத்தில் சிறிலங்கா அணியின் அசங்க திலகரட்னவின் விக்கற்றை வீழ்த்தி இந்த உலக சாதனையை நிலைநாட்டினார்.

இதன்மூலம் நியூசிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் சேர் ரிச்சேட் ஹாட்லி வீழ்த்திய 431 விக்கெட்டுகளை விஞ்சி 432 விக்கெட்டுகளை வீழ்த்திய பெருமையை கபில்தேவ் பெற்றுள்ளார். 432 ஆவது விக்கெட்டை வீழ்த்தியதும் கபில்தேவை பாராட்டும் வகையில் விளையாட்டரங்கிலிருந்து அனைவரும் எழுந்து நின்று கரவொலி எழுப்பினர். கபிலின் இந்த உலக சாதனையை இந்திய ஜனாதிபதி, பிரதமர், மாநில முதலமைச்சர்கள் பாராட்டியுள்ளனர்.

இதேவேளை இந்த கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்ட முடிவில் இந்தியா ஒரு விக்கட் இழப்பிற்கு 90 ஓட்டங்களை பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 119 ஓட்டங்களை பெற்றது.

### ஐ. தே. க

மளவு ஊழல்கள் இந்த அரசாங்கத்தின் பதவிக் காலத்தில் இடம் பெற்றுள்ளது. தென்மாகாணசபை உறுப்பினர் ஒருவரைக் கடத்திச் சென்றதன் மூலம் அநாவசிய தேர்தலொன்றிற்கு அரசாங்கம் வழிவகுத்துள்ளது. இவையே ஐ. தே. க. அரசாங்கம் மீதான முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் என ரிச்சர்ட்பத்திரண தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்; அரசாங்கத்திற்கு எதிராகக் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஏனைய எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெறுவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதற்கான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### 80 லட்சம்

வுப் பிரிவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில், சிறிலங்கா செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரிகள் மட்டத்தில் ஊழலும், குழியறிக்கிற வேலைகளும் நிறைந்திருப்பதாகத் தெரிவிப்பதுடன், உடன் விசாரணை மேற்கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

ஆளுநர் சபையின் ஏகமனதான முடிவை அடுத்தே டாக்டர் கிங்ஸிலி பதவிவிலக்கப்பட்டதாக சிறிலங்கா செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் டி. டி. அபேசிங்கா தெரிவித்துள்ளார்.

### உறுப்பினர்

மேற்கொண்டுவரும் அமைச்சர் யோண் அமரதுங்கா மற்றும் வெளியுறவுச் செயலர் பேணாட் திலகரெட்ணாவும் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் பலரை விசாரித்திருப்பதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பணிப்பாளர் நாயகம் ஜெயந்தா தனபாலா, பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
01-10-1906

உதிர்வு
10-01-1994

### திரு. கந்தர் பொன்னையா

மறைந்தும் எம் மனதில் மறையாத எம் குடும்பத் தலைவரை நினைவு கூர்ந்து ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் 09.02.94 இன்று எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்



## பார்த்தால் குதிப்பீர்கள்!
## தவறவிட்டால் தவிப்பீர்கள்!!

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும்
நிதர்சனமும் இணைந்து தரும்
முல்லை மாவட்ட கலைஞர்களின்

### பாயும்புலி பண்டாரவன்னியன்
(வரலாற்று நாடகம்)

### ஆக்கிரமிப்பாளரின் அவலம்
[இசை நாடகம்]

இடம்: சாவகச்சேரி இந்துமகளிர் கல்லூரி
காலம்: 09-2-94 புதன் இன்று பி. ப. 7-00
அன்பளிப்பு: ரூ. 1000 ரூ 500 ரூ. 15 ரூ. 10

அன்பளிப்பு

இன்றைய அறிமுகம் நாளைய நாகரிகம்

தேன்மதுரத் தென்றலாள் வான்பரப்பில் வந்ததுபோல்
யாழ்நகரில் வந்துதித்தாள்


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 08.02.1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 650

வடபகுதிக்கு உள்ளேவந்த வாகன இலக்கங்கள்:
41-9876, 40-4760, 24-4361, 42-3339, 24-4854
27-5823, 42-1423, 24-7078, 27-9772, 27-5187
26-0987, 26-3068, 26-1689, 28-1686, 27-8789
26-5725, 26-8789, 26-9755, 28-4672, 26 3937
26-0560, 26-9186, 28-4817, 28-4709.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
24-1040, 27-1380, 26-3518, 26-2414, 27-2084
26-1089, 28-1062, 26-2827, 41-8432, 41-9995


யா/ கந்தரோடை
தமிழ்க் கந்தையா வித்தியாசாலை

## நூற்றாண்டுக் கொண்டாட்டம்

கல்வி அபிவிருத்தி நிதிக்கான

"...... விழா"

31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் 09.02.94 இன்று எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னை இல்லம்,
செம்பியன்பற்று.

குடும்பத்தினர்.
(7466)

## 90-ம் நாள் நினைவலைகள்

தாயின் மடியில்
1971
—
12
—
09



தாயக மண்ணில்
1993
—
11
—
12

### 2-ம் லெப். மணிமாறன்
(தம்பிராஜா இரகுலதரன்)

மகனே!
உன் நினைவு மறக்கக் கூடியதல்ல
என்றும் எல்லோராலும் வணக்கத்திற்குரியது.

மகனின் வீரச்சாவினை அறிந்து, எமது இல்லத்திற்கு வருகை தந்து ஆறுதலும், பலவித உதவிகளும் அளித்த போராளிகள், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றி. இவரின் நினைவு தினத்தன்று (புதன்கிழமை) எமது இல்லத்தில் நிகழும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(தவளை இராணுவ நடவடிக்கையில் இவருடன் வீரச்சாவை தழுவிய ஏனைய மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.)

—குடும்பத்தினர்

உரும்பராய், மேற்கு,
உரும்பராய்.

(7468)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இன்றைய அறிமுகம் நாளைய நாகரிகம்

தேன்மதுரத் தென்றலாள் வான்பரப்பில் வந்ததுபோல்
யாழ்நகரில் வந்துதித்தாள்

### மதுரா பட்டு மகால்
75, பெரியகடை, யாழ்ப்பாணம்.

குறிப்பு: மதுரா ஆதரவாளர்களின் சிட்டை இலக்கங்கள் அனைத்தும் பரிசுத்திட்ட குலுக்கலில் 1994 சித்திரையில் சேர்த்துக்கொள்ளப்பட இருப்பதால் சிட்டைகளை பத்திரப்படுத்துங்கள்.

1ம் பரிசு தங்கப்பதக்கம்
2-ம் பரிசு ரூ. 5000
3ம் பரிசு ரூ 2500

பல ஆறுதல் பரிசுகள்

(சி-8574)

## யாழ்ப்பாண மாநகரசபை
### கூறுவிலை

கீழ்க்குறிப்பிடப்படும் பொருட்கள் யாழ்ப்பாண மாநகரசபைக்கு தேவைப்படுவதினால் அவற்றை வழங்கக்கூடியவர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இக்கூறுவிலைகள் 22-02-94 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ அரக்கு முத்திரை இட்ட உறையினுள் வைத்து கையளிக்கப்படல் வேண்டும். இது விடயமாக மேலும் தகவல் அறியவிரும்பின் அலுவலக நேரத்தில் மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும். பொருட்களின் விபரம் வருமாறு:-

01. வெற்று எண்ணெய் பீப்பா — 50 இல
02. $1\frac{1}{2}$'' $1\frac{1}{2}$'' $\frac{1}{4}$'' 'எல்' பட்டம் — 01 நீள அடியின் விலை
03. 2'' 2'' $\frac{1}{4}$'' ,, — ,,
04. 5'' 2'' 10' நீளமான பாலைத்திராந்தி - ஒன்றின் விலை
05. 13 அல்லது 14'' அளவுடைய பாவித்த தரமான றிம், கப், ரயர், ரியூப்புடன் கூடிய $1\frac{1}{4}$'' அல்லது $1\frac{1}{2}$'' அச்சுடன் நன்கு சுழலக்கூடிய வகையில் றேசர் பொருத்தி வழங்க. --- 01 சோடியின் விலை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
1994-02-07

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-8563)

கல்வி அபிவிருத்தி நிதிக்கான

## "கலை விழா"
(5. 3. 94)

- மங்களகரமான நாதஸ்வர இசை
- காதிற்கினிய கீதங்கள்
- கண்ணுக்கினிய நாடகங்கள்
- மயங்கவைக்கும் பான்ட்வாத்திய இசை

அனுமதிச்சீட்டுக்கள் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சி. சிவசரவணபவன்
தலைவர்

அ. தேவராசன்
ஆ. சி. கணேசவேல்
இணைச்செயலாளர்கள்.

பழைய மாணவர் சங்கம்

05-02-94
(7467)

## 31-ம் நாள் நினைவாக...

பிறப்பு
20
—
08
—
1971



இறப்பு
10
—
01
—
1994

### மருசலீன் டீன்யூலியஸ் கிறேசியன்

"சீவியத்தில் நேசித்தோம்
மரணத்திலும் மறவோம்"

விக்கிரம் தையல் மாளிகை
உரிமையாளர்,
தொ. விக்கிரமாதித்தன்

215 அர்ச்சுனா வீதி,
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி-8569)

டாரங்கள் தெரிவிக்கின்றன. பணிப்பாளர் நாயகம் ஜெயந்தா தனபாலா, பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) நிமால் விஜேரெட்னா, பணிப்பாளர் (சட்ட விவகாரம்) றோகான் பெரேரா, பணிப்பாளர் (மனித உரிமைகள்) திருமதி தேவராஜா ஆகியோரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இது சம்பந்தமாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கடும் நடவடிக்கை எடுப்பார் என நம்பகரமான வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர்.

**தபால்**
யையும் ஓர் அத்தியாவசிய சேவையாகக் கருதி மேற்படி சேவையைச் சீராக்கும்படி எமது செய்தியாளர் அவரிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

வடபகுதிக்கான தபால் சேவையை சீராக்குவதற்கு தபால் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகளே தீவிர முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றும் இவ் அதிகாரிகளது கவனயீனத்தாலேயே கடந்த காலத்தில் தபால் சேவை சீர்குலைந்ததாகத் தெரிவித்தார். (க). (நி)

**புலிகளுக்கு**
நடவடிக்கைகளே காணப்படுகின்றன.

எதிரியின் மாறிவரும் தந்திரங்களுக்குஏற்பஇராணுவம் பயிற்சி மூலம் தன்னை சரிசெய்து கொள்ள வேண்டும் எனவும் அச்செய்தியாளர் எழுதியுள்ளார்.

**கொத்தலாவல**
வில் கொழும்பு திரும்பி தன் மேல் விழுந்த களங்கத்தை அகற்ற அதிகாரிகளிடம் உண்மை நிலையை விளக்குவேன் என கடந்த வாரம் அறிவித்த லெப். கேணல் கொத்தலாவல இன்னமும் நாடு திரும்பவில்லை. இவர் எங்குள்ளார் என்பது இன்னமும் தெரியவில்லை என இராணுவ அதிகாரிகள் கூறினர்.